## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் -2013

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு

செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 01 இன் 21(இ) பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் தொடர்பான கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பூச்சியப் பெறுமதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த தற்போது பயன்பாட்டில் உள்ள 03 வாகனங்கள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 6,317,841 ஆன செலவினம் நிதிசார் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குவதற்குப் பதிலாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிதியத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பயன்படு ஆயுட்காலம் வரையறுக்கப்படாத காணிக்கு பெறுமானத் தேய்வு மேற்கொள்ள முடியாத போதிலும், காணி மற்றும் கட்டிடங்களை வெவ்வேறாக இனங்காணாமல் காணியின் பெறுமதியை கட்டிடமெனக் கருதி 5 சதவீதப் படி வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஆசிய மன்றத்திடமிருந்து பெற்றுக்கொண்ட தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 503,246 ஆன புத்தகங்கள், நூலக புத்தகங்கள் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக குறித்த மானியத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீடு குறித்துரைக்கப்பட்ட அளவிற்கு குறைவாக கணக்கீடு செய்த காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 102,529 ஆல் குறைவடைந்திருந்ததுடன், பணிக்கொடை ஒதுக்கீடாக ரூபா 1,471,816 கூடுதலாக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

02 ஆண்டு முதல் 04 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,094,898 தொகையான செலுத்த வேண்டிய மீதியொன்றை தீர்வு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) வைப்புக்கள் | | |
| (i) சமூக வேலை தொடர்பான பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (M.S.W) | 44,000 | வைப்புப் பதிவேடுகள் மற்றும் விரிவான தகவல்கள் |
| (ii) பொது வைப்புக்கள் | 33,061 | வைப்புப் பதிவேடுகள் மற்றும் விரிவான தகவல்கள் |
| (ஆ) அருவச் சொத்துக்கள் (Microsoft license) | 694,118 | உடன்படிக்கைப் பத்திரம் |

## 3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 751 | களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற அனைத்துப் பொருட்களும் களஞ்சியப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், சமூக அபிவிருத்தி கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் மூலம் மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அச்சிடப்பட்டிருந்த ரூபா 140,460 பெறுமதியான கைநூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள் என்பன களஞ்சியப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2010 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின் 3(iii) ஆம் பிரிவு | கற்கைநெறி அல்லது பயிற்சிகளுக்காக வெளிநாட்டிற்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய சகல செலவீனங்களையும் வெளிநாட்டு முகவர் நிறுவகத்தினால் செலவிடப்பட்டிருக்கையில் ஒரு நாளைக்கு 50 ஐக்கிய அமெரிக்க குடியரசின் டொலர்கள் வீதம் அமையக் கொடுப்பனவாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 186,156 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) 2001 யூலை 02 ஆம் திகதிய 2001/03 எம்எப்/ஜிஏ2 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை. | பயிற்சி அல்லது வெளிநாட்டு சுற்றுலாவில் பங்குபற்றி மீண்டும் வந்த நாள் முதல் இரண்டு வாரங்களுக்குள் பயிற்சி/ வெளிநாட்டுச் சுற்றுலாவிற்குரிய அறிக்கை நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2010 ஆண்டிலிருந்து 2013 யூன் 30 வரையில் 10 சந்தர்ப்பங்களில் நிறுவகத்தில் |

| | |
|---|---|
| | சேவையில் ஈடுபட்டுள்ள 08 உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுச் சுற்றுலாவிற்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2010 செப்தம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 02(iv)ஆம் பிரிவு | தொலைபேசி பட்டியல்களைத் தீர்வு செய்யும் போது உயர் எல்லையை விஞ்சி மீளாய்வாண்டில் ரூபா 48,444 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 3.1(ii)ஆம் பிரிவு | சர்வதேச நேரடி தொலைபேசி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 12,666 தொகையான சர்வதேச நேரடி தொலைபேசிக் கட்டணங்கள் மீளளிக்கப்பட்டிருந்தன. |
| (உ) 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவு | 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய 121/08/2013 ஆம் இலக்க நிர்வாகச் சபை தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ரூபா 30,000 வீதம் மீளாய்வாண்டின் 03 மாதங்களுக்காக ரூபா 90,000 தொகை சுற்றறிக்கைக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றிற்கு முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவு ரூபா 7,806,700 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,228,093 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 2,578,607 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதற்காக அரசின் மானியங்கள் ரூபா 12,375,742 ஆல் அதிகரித்தமை, ஏனைய வருமானம் ரூபா 671,385 ஆல் அதிகரித்தமை, தனிப்பட்ட வேதனங்களுக்கான கொடுப்பனவுகள் ரூபா 9,000,712 ஆல் அதிகரித்தமையும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 6,625,072 ஆல் அதிகரித்தமையும் காரணங்களாக இருந்தன.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான அநுராதபுரம் தலாவையில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்திலும் களனி மாணவர் விடுதியிலும் 2013 ஆண்டில் செயற்படுத்துவதற்கு அவசியமான திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்விசார் நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சமூக சேவைக் கல்லூரியின் பயிற்சி பிரிவின் மூலம் நடாத்தப்பட்ட பிரதான பாடநெறியான ஒன்றரை வருட பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்காக சேர்க்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 1,230 ஆக இருந்த போதிலும், 852 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும் 378 பேரைச் சேர்த்துக்கொள்வதற்கு இயலுமாக இருந்ததுடன், அந்த அளவு மொத்தமாக சேர்த்துக் கொள்ளக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையில் 31 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) சமூக வேலை பட்டப்படிப்பிற்காக 2006/2010 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பாக 2009/2013 இல் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 26 சதவீத குறைவொன்றும் அந்த ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 73 இலிருந்து 69 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆலோசனை தொடர்பான ஒன்றரை வருட டிப்ளோமா பாடநெறிகள் 05 இன் பெறுபேறுகளை வழங்குவதற்கு 05 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன், அப்பாடநெறிகளுக்குரிய பட்டமளிப்பு விழா 2014 மார்ச் 31 வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆலோசனை தொடர்பான 03 டிப்ளோமா பாடநெறிகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 31 ஆம் திகதி வரை பாடநெறி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) பயிற்சிப் பிரிவின் மூலம் 12 குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு 480 பேருக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், குறுகிய கால நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 374 பேர் மாத்திரம் சமூகமளித்திருந்தமையால் இது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் 78 சதவீதமான அளவாக இருந்தது.

**(இ) சமூக அபிவிருத்தி கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பாடநெறிகளைப் பூர்த்தி செய்த சமூக வேலை துறைசார் நிபுணர்கள் தொடர்பான கணிப்பீட்டின் மூலம் தரவு வங்கிக்கு, 30 ஆண்டுகளுக்குள் (1980-2010) வெளியேறிய மாணவர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வது இலக்காக இருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கையில் முதியோர் இல்லங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் ஆராய்ச்சியின் கீழ் தரவு வங்கிக்கு 225 முதியோர் இல்லங்களில் முதியோர் தொடர்பாக தகவல்களை சேகரிப்பதற்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) சமூக வேலை பற்றிய ஆராய்ச்சி நடைமுறை தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 100,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்பாடநெறி நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் செய்திக் கடிதம் (News Letter) வெளியிடுவதற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 50,000 தொகை குறித்த செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சமூக அபிவிருத்தி கொள்கை ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவின் மூலம் உலக சுகாதார அமைப்பு மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து இலங்கையின் நிறுவன ரீதியான சிறுவர்களிடம் காணப்படும் நிலைமை தொடர்பாக ஆய்வு செய்யும் ஆராய்ச்சிக்காக ரூபா 3,875,940 தொகை ஒதுக்கப்பட்டிருந்துடன், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பான செயற்பாட்டிற்காக ரூபா 1,971,188 செலவிடப்பட்டிருந்ததாக செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(உ) நூலகம்
----------

2013 ஆம் ஆண்டின் போது நூலகம் தொடர்பாக திட்டமிடப்பட்ட கீழே காட்டப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) 2013 ஆம் ஆண்டில் நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 500,000 தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அச்செயற்பாட்டிற்காக ரூபா 201,098 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) நூலகத்தைப் பயன்படுத்துகின்ற மாணவ மாணவிகளுக்கு செயற்திறனான சேவையொன்றை வழங்குவதற்காக நூலகத்திற்கு 2013 ஆம் ஆண்டில் புதிய நிழற்பட பிரதி இயந்திரமொன்று (photo copier) கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் நிழற்பட பிரதி இயந்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தின் மூலம் எஸ் சன்டேர்ஸ் நிதியம், சொய்சா புலமைப் பரிசில் நிதியம் மற்றும் ரன்ஜனி ஜயலத் நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து 08 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மாலபே தகவல் தொழிநுட்ப பூங்காவில் காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாட்டை நிறைவேற்ற முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் போது நிறுவகம் மற்றும் நாவல வீதி கற்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவு என்பவற்றை வாடகை கட்டிடங்களில் நடாத்திச் சென்றமையால் வாடகையாக ரூபா 15,456,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி மொத்த வருமானத்தில் 22 சதவீதமாகவும் மொத்த செலவினத்தின் 20 சதவீதமாகவும் இருந்தன.

(ஆ) 2012 பொருள் மெய்மையாய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட பாவனை பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த 2478 எண்ணிக்கையான புத்தகங்கள் கணக்காய்வு திகதி வரையில் பாவனை பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பதவியணியினர் நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிட பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| பதவியணியினர் விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கல்விசார்ந்த | 58 | 43 | 15 |
| கல்விசாரா | 62 | 56 | 06 |
| மொத்தம் | 120 | 99 | 21 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் கல்விசார் பதவியணியில் 26 சதவீதமும் கல்விசாரா பதவியணியில் 10 சதவீதமுமாக நிறுவகத்தின் மொத்த பதவியணியில் 18 சதவீதம் வெற்றிடங்களாக இருந்ததுடன், கல்விசார் பதவியணியில் இரண்டு பேர் வெளிநாடு சென்றிருந்தனர்.

(ஆ) 2006 ஏப்ரல் 05 ஆம் திகதிய 06/0626/227/016 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவகத்தின் கல்விசார் தலைவராக பேராசிரியர் ஒருவர் ஓராண்டு காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் 2006 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 2007 ஏப்ரல் 09 ஆம் திகதி வரை ஓராண்டு சேவைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாமல் 2007 ஏப்ரல் முதல் 2013 நவம்பர் வரை மொத்தம் ரூபா 2,145,270 படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் சமூக சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தினால் ரூபா 268,845 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2014 ஏப்ரல் 08 ஆம் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கிடையே 12 சதவீத முதல் 374 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடியளவு விலகல் இருந்தமையால் சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) களஞ்சிய முகாமைத்துவம்

(ஆ) இடர் கடன்

(இ) பேரேடுகளைப் பராமரித்தல்

(ஈ) கணக்கீட்டு முறைமை

(உ) தொலைபேசிப் பட்டியல் மீளளிப்பு